<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 191/2019</u>

பெயர் : சரவணன் P.W.1.

த/பெ. : தெட்சிணாமூர்த்தி

தேதி : 11.08.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>1,8,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. இந்த வழக்கின் 2 முதல் 5 பிரதிவாதிகள் மார்கண்டனின் வாரிசுகள் என்றால் சரிதான். 6, 7 பிரதிவாதிகள் காந்திமதியின் மகள் மற்றும் மகன் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணம் காந்திமதியின் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன ஆவணம் எனது பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள அதே நான்கெல்லைகள் தான் வாசாஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காந்திமதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தில் புல எண்.320 என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதன் உட்பிரிவுகள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றாலும் சரிதான்.

2. எனது பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் வாசாஆ 2 ல் புல எண்.320/5B ல் 64 செண்ட்டும், புல எண்.320/5C ல் 4 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன ஆவணத்தில் தெட்சிணாமூர்த்தி புஞ்சைக்கு தெற்கு, முத்தையா படையாட்சி புஞ்சைக்கு வடக்கு மற்றும் கிழக்கு, முத்துகிருஷ்ணன் புஞ்சைக்கு மேற்கு என நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் வாசாஆ 6 என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கலியமூர்த்தி, பக்கிரிசாமி புஞ்சைக்கு வடக்கு, ராஜேஸ்வரி வகையறா இதர நிலத்திற்கு தெற்கு, முத்துகிருஷ்ணன் புஞ்சைக்கு மேற்கு, பக்கிரசாமி புஞ்சைக்கு கிழக்கு என நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குபடி புல எண் 320/11ல் 68 செண்ட் நிலத்தை உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். புல எண். 320/11 தான் புல எண் 320/5B மற்றும் 320/5C என தவறாக பத்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் வாங்கிய கிரய ஆவணத்தில் புல எண்ணில் தவறு ஏற்பட்டுள்ளது தொடர்பாக காந்திமதி என்பவரிடமிருந்து பிழைத்திருத்த பத்திரம் எழுதிவாங்கியுள்ளேனா என்றால் இல்லை. புல எண்.320 ல் மொத்த திட்ட விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண். 320 என்பது எத்தனை உட்பிரிவுகளாக

பிரிக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ 5 ஆன ஆவணம் 10ம் பிரதிவாதிக்கு நான் பதிவு தபால் மூலம் அனுப்பினேனா அல்லது நேரடியாக கொடுத்தேனா என்றால் நேரடியாக கொடுத்தேன். மேற்படி மனுவிற்க அந்த 10ம் பிரதிவாதி என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 10ம் பிரதிவாதி நடவடிக்கை எடுக்காதது குறித்து அவரது மேல் அதிகாரிகளான கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு மேல் முறையீடு மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

4. வாசாஆ 5 ஆன ஆவணம் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக நானே தயார் செய்த ஆவணம் என்றாலும், வட்டாட்சியர் அவர்களுக்கு மேற்படி ஆவணத்தை நான் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ 7 ஆன ஆவணம் புல எண். 320/11 ற்கான பட்டா என்றால் சரிதான். அந்த ஆவணம் 1 ெஹக்டேர்ஸ் 88 ஏர்ஸ்க்கு உள்ள ஆவணம் என்றால் சரிதான். அந்த பட்டா ஆவணத்தில் 2 முதல் 5 பிரதிவாதிகளின் பெயர்களும் மேலும் 4 நபர்களின் பெயர்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள பட்டா எண். 663 என்றால் சரிதான்.

5. வாசாஆ 9 ஆன ஆவணம் புல எண் 320/5 B மற்றும் புல எண் 320/5c ற்கான சிட்டாக்கள் என்றால் சரிதான். புலஎண்.320/5B கான பட்டா எண். 835 என்றால் சரிதான். அதன் பரப்பு 26 ஏர்ஸ் என்றால் சரிதான். புல எண். 320/5C கான பட்டா எண்.836 என்றாலும் அதன் விஸ்தீரணம் 20 ஏர்ஸ் என்றாலும் சரிதான். வாசாஆ 4 ஆன ஆவணம் புல எண். 320க்கான பழைய புல வரைபடம் என்றால் சரிதான். புல எண்.320க்கான புதிய புல வரைபடத்தை தாக்கல் செயய இயலுமா என்றால் இயலும். புலஎண். 320க்கான புதிய புல வரைபடத்தை தாக்கல் செய்தால் புல எண். உட்பிரிவுகளை பொறுத்து நான் கோரிய கட்சி பொய்யானது என்பது தெரியவந்துவிடும் என்பதால் தான் நான் பழைய புல வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 4 ஆன ஆவணமானது மேற்படி புல எண்ணின் உட்பிரிவுகளை பொறுத்தும் பூமியில் உள்ள உண்மையான நிலையை பொறுத்தும் காண்பிக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

6. காந்திமதி வாங்கிய கிரய ஆவணத்தில் சுப்ராய படையாட்சி தெற்கு, முத்தையா படையாட்சி வடக்கு மற்றும் கிழக்கு எனது இதற புஞ்சைக்கு மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது என்பது மார்கண்டனை குறிக்கும் என்றால் சரிதான். மார்கண்டன் என்பவருக்கு காழியப்பநல்லூர் கிராமத்தில் ஏராலமான சொத்துகள் உள்ளது என்றால் சரிதான். புல எண். 320ல் உள்ள மொத்த சொத்துகளும்

மார்கண்டனுக்கு பாத்தியபட்டது என்றால் சரிதான். வாசாஆ 3 ஆன ஆவணம் காந்திமதி யின் வாரிசுகளான 6,7 பிரதிவாதிகள் என்மீதும் இதர நபர்கள் மீதும் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 221/2014 என்ற வழக்கின் தீர்ப்பாணை என்றால் சரிதான். அந்த வழக்கின் சொத்து விரபத்தில் புல எண். 320/5B ல் 26 ஏர்ஸ் என்றும், 320/5C ல் 1.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 3 ஆன ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணம் என்றாலும், குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாசாஆ 1, வாசாஆ 2 மற்றும் வாசாஆ 3 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் வாசாஆ 6 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்தை என்னிடமிருந்து முதல் பிரதிவாதி கிரயம் பெறுவதற்கு 13.05.2015 அன்று வாய்மொழி ஒப்பந்தம் செய்துள்ளார் என்பது பொய் என்றால் சரியல்ல. எவ்வித வாய்மொழி ஒப்பந்தமும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த காலத்திலும் தாவா சொத்தை பொறுத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2012 ஆண்டு முதல் வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அடிக்கடி வெளிநாடு சென்று வருவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 8 ஆன ஆவணம் புல எண். 320/5B மற்றும் புல எண்320/5C ஐ அளப்பதற்கு நான் செலுத்திய செலுத்து சீட்டு என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 8ன் படி எப்போது அளக்கப்பட்டது என்றால் ஜூன் மாதம் 2016ல் அளக்கப்பட்டது. அவ்வாறு அளக்கப்பட்டதற்கு நில அளவையரிடமிருந்து அறிக்கை பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அளவீடு செய்த போது பட்டா தவறாக உள்ளது என்பது தெரியவந்தது. நான் 2016 ல் அளவீடு செய்த தேதியை நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை.

8. தாவா சொத்திற்கான புல எண் மாற்றிய பிறகு கிரயம் செய்து கொள்ளலாம் என 1ம் பிரதிவாதி என்னிடம் கூறியதாக சொல்வது உண்மை இல்லை என்றால் சரியல்ல. காந்திமதி என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்ற 68 செண்ட் நிலம் விவசாயம் செய்வதற்கான கிரயம் பெறப்பட்டதா என்றால் ஆமாம். நான் ஒரு சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும், 1ம்பிரதிவாதி வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் சரிதான். நான் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர் என்பதாலும், 1ம் பிரதிவாதி சிறுபாண்மை சமூகத்தை சேர்ந்தவர் என்பதாலும் அவரிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது

வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கபடமாக செயல்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளதாக எனது வழக்குரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற வாசாஆ 6 ஆன ஆவணம் செல்லாது என்றும், வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்றும், வழக்கு சொத்தின் சரியான புல எண். 320/11 என்றும் விளம்பல் செய்ய வேண்டும் என கோரி வழக்கை தாக்கல் சயெ்துள்ளேன் என்றால் சரிதான். புல எண். 320/11க்கான பட்டாவை எனது பெயரில் வழக்க வேண்டும் என கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

9. எனது பெயரில் பட்டா வழங்க வேண்டும என கோரி நான் நேரடியாக உரிமையியல் நீதிமன்றத்தை அனுகமுடியாது என்றாலும், வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களிடம் தான்மேல்முறையீடு செயய வேண்டும் என்றாலும், பட்டா வழங்குவது குறித்து உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகார வரம்பு இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது புல எண்.320 க்கான புல வரைபடம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் புல எண்.320/5B, 320/5C, 320/11 ஆகியவை தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. புல எண்.320/5B, 320/5C, 320/11 ஆகியவற்றிற்கு தனித்தனியாக அ பதிவேடு, சிட்டா, அடங்கல் ஆகியவை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண். 320/11ல் 320/11A, 320/11B1, 320/11B2, 320/11C என நான்கு உட்பிரிவுகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.320/11 ல் எந்த உட்பிரிவு குறித்து நான் பரிகாரம் கோருகிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அடிப்படைய முகாந்திரம் அற்றது என்றாலும், புல எண்கள் மற்றும் பட்டாவை பொறுத்து வருவாய் துறையினர் தவறாக பதிவு செய்துள்ளார்கள் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றாலும், தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் தேவையின்றி அரசு அதிகாரிகள் உட்பட பிரதிவாதிகளை சேர்த்து நீதிமன்ற நேரத்தை வீணடித்தேன் என்றால் சரியல்ல.

**10 முதல் 14 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**